இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 13-11-2025


# அமித்ஷா பொறுப்பேற்க வேண்டாமா?

டெல்லியில் குண்டு வெடித்துள்ளது. ஆளும் பா.ஜ.க. முதலமைச்சர் தனது பதவியை விட்டு விலகியதாகப் பத்திரிக்கைகளில் செய்தி இல்லை.

யூனியன் பிரதேசம் என்பதால் டெல்லியின் அனைத்துப் பாதுகாப்பும், ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது. ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்கள் பதவியை விட்டு விலகியதாகச் செய்திகள் இல்லை.

பா.ஜ.க. எங்கே சென்றாலும், 'இரட்டை இஞ்சின் அரசு தேவை' என்று சொல்லும். ஒன்றியத்திலும், மாநிலத்திலும் பா.ஜ.க. ஆட்சி ஒன்றாக அமைந்தால் வளர்ச்சியைக் கொடுத்துவிடுவோம் என்று பசப்புவார்கள். இரட்டை இஞ்சின் ஆட்சி நடக்கும் டெல்லியில் குண்டு வெடித்து 13 பேர் இறந்துள்ளார்கள். 30க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளார்கள்.

**டெல்லி என்றால் ஏதோ மூலையில் அல்ல. தலையில், அதாவது செங்கோட்டைக்கு அருகில் குண்டு வெடித்துள்ளது. ஆளும் தலை சரியாக இல்லை என்பதைத்தானே இது காட்டுகிறது.**

கடந்த 10 ஆம் தேதியன்று இரவு 7 மணிக்கு டெல்லி செங்கோட்டைக்கு அருகே சென்ற ஒரு காரில் இருந்து குண்டு வெடித்துள்ளது. செங்கோட்டையில் இருந்து சுமார் 150 மீட்டர் தூரத்தில் உள்ள லால் கிலா மெட்ரோ ரயில் நிலையம் அருகில் இது நடந்துள்ளது. இதுவரை 13 பேர் மரணம் அடைந்துள்ளார்கள். பலரும் பலத்த காயம் அடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

குண்டு வெடிப்பில் பயன்படுத்தப்பட்ட கார், அரியானா மாநிலத்தைச் சேர்ந்தவருடையது என்றும், தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்களுக்குச் சொந்தமானது என்றும் தெரிய வந்துள்ளது. காஷ்மீர் புல்வாமா பகுதியைச் சேர்ந்த மருத்துவர் உமர் முகமது ஓட்டி வந்துள்ளார். அவரும் உயிரிழந்து விட்டார். அரியானா மருத்துவமனையில் மருத்துவராக இருந்துள்ளார். அவருடன் தொடர்பில் இருந்தவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். பாகிஸ்தானில் இருந்து செயல்படும் ஜெய்ஷ் இ முகமது அமைப்புக்கு இதில் தொடர்பு இருப்பதாக டெல்லி போலீஸ் சொல்லி இருக்கிறது.

குண்டுவெடிப்பில் அம்மோனியம் நைட்ரேட், எரிபொருள் எண்ணெய், டெட்டனேட்டர்கள் பயன்படுத்தப்பட்டு இருக்கிறது. சில நாட்களுக்கு முன்னாள் ஃபரிதாபாத்தில் ஏராளமான வெடிமருந்துகள் கைப்பற்றப்பட்டது. அதற்கும் இந்தச் சம்பவத்துக்கும் தொடர்பு இருக்கலாம் என புலனாய்வு அமைப்பினர் கருதுகிறார்கள்.

கார் குண்டு வெடிப்பு நேரத்து புதிய சி.சி.டி.வி. காட்சிகள் வெளியாகி உள்ளன. செங்கோட்டை பார்க்கிங் பகுதியில் 3 மணிநேரம் அந்தக் கார் நிறுத்தப்பட்டு இருந்துள்ளது. HR 26 CE 7674 என்ற பதிவெண் கொண்ட ஹுண்டாய் ஐ20 கார், மாலை 3.19 மணிக்கு உள்ளே நுழைவதும், பின்னர் 6.30 மணிக்கு வெளியேறுவதும் சி.சி.டி.வி.யில் பதிவாகியுள்ளது. பார்க்கிங் பகுதிக்குள் அந்தக் கார் நுழையும் போது, அதன் ஓட்டுநர் ஜன்னலில் கை வைத்திருப்பதும் சி.சி.டி.வி. காட்சிகள் மூலம் தெரியவந்துள்ளது. கார் ஓட்டுநர் நீலம் மற்றும் கருப்பு நிறத்தால் ஆன டீ-ஷர்ட் அணிந்திருப்பதும், காருக்கு வெளியே கையை தொங்கவிட்ட படி இருப்பதும் தெரிய வந்துள்ளது. ஹரியானா மாநில பதிவெண் கொண்ட அந்தக் கார், ஜம்மு-காஷ்மீரின் புல்வாமா பகுதியைச் சேர்ந்தவருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது.

"வெடிகுண்டு வெடித்தபோது பூமியே குலுங்கியது. நிலநடுக்கம் வந்ததைப் போல உணர்ந்தேன். என்னுடைய மகன், கார் குண்டுவெடிப்பில் சிதறிய உடல்களைப் பார்த்து பதறினான். உடலின் சில துண்டுகள் ஜெயின் மந்திர் சுவருக்குள் வந்து விழுந்தது" என்று ஒருவர் பேட்டி தந்துள்ளார். மொத்தம் மூன்று முறை வெடிச் சத்தம் கேட்டதாக பொதுமக்கள் சொல்கிறார்கள். அப்பகுதியில் மனித உடல்களின் பாகங்கள் சிதறிக் கிடந்துள்ளன. சில தலைகள் தனியாகக் கிடந்துள்ளன. நான்கு வாகனங்கள் கருகி இருக்கிறது. வெடிகுண்டு சப்தத்தின் அதிர்வலைகள் 700 மீட்டர் முதல் 900 மீட்டர் வரை உணரப்பட்டுள்ளன.

**"இது ஒரு துரதிஷ்டமான சம்பவம்" என்று சொல்லி அமைதியாகி விட்டார் டெல்லி பா.ஜ.க. முதலமைச்சர் ரேகா குப்தா. அவரது கடமை அவ்வளவு தானா? அவருக்கு வேறு எந்தப் பொறுப்பும் இல்லையா? கடமையும் இல்லையா?**

"டெல்லி குண்டு வெடிப்பில் சதி செய்த, ஈடுபட்ட ஒவ்வொருவரும் எங்கள் விசாரணை அமைப்புகளின் முழுமையான நடவடிக்கைக்கு உள்ளாவார்கள்" என்று உள்துறை அமைச்சர் அமித்ஷா சொல்லி இருக்கிறார். 'அமித்ஷா ஆவேசம்' என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. சம்பவத்துக்கு முன்னால் உள்துறை அமைச்சர் என்ன செய்து கொண்டு இருந்தார்? சம்பவங்கள் நடக்காமல் என்ன செய்யப்பட்டது?

**கார் குண்டு வெடிப்பு நடப்பதற்கு சில மணி நேரத்துக்கு முன்பு தான் அரியானா மாநிலத்தில் ஃபரிதாபாத் என்ற இடத்தில் உள்ள அடுக்கு மாடி குடியிருப்பில் இருந்து 3 ஆயிரம் கிலோ எடை கொண்ட வெடி பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளது. அதில் பயங்கர வெடி பொருட்களைத் தயாரிக்கக் கூடிய 350 கிலோ எடை கொண்ட அம்மோனியம் நைட்ரேட் இருந்ததை காவல் துறையினர் கண்டுபிடித்தனர். அதைத் தொடர்ந்து இது நடந்துள்ளது. அரியானாவில் இப்போது ஆட்சி செய்வதும் பா.ஜ.க. தான்.**

**பா.ஜ.க. அல்லாத மாநிலத்தில் இப்படி ஒரு சம்பவம் நடந்திருந்தால், பா.ஜ.க.வினர் எத்தகைய வார்த்தை வெடிகுண்டுகளை வீசுவார்கள் என்பதை அனைவரும் அறிவோம். ஆனால் இப்போது சம்பவம் பா.ஜ.க. ஆளும் மாநிலத்தில் நடந்ததால் அமைதியாகி விட்டார்கள்.**

குண்டு வைத்தது யார் என்று கண்டுபிடித்துவிட்டார்கள். பாதுகாப்பில் கோட்டை விட்டது யார் என்பதும் அனைவர்க்கும் தெரியும். பொறுப்பான அவர்கள் பொறுப்பேற்க வேண்டாமா? வாய் கிழியப் பேசினால் போதுமா?



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (12.11.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், மாற்றுக்கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் ஈரோடு சாமி, சிவசுப்பிரமணியன், கணேசன், முருகேசன் உள்ளிட்ட 600 பேர் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்வின்போது, சிவகங்கை மாவட்ட கழகச் செயலாளரும், கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே.ஆர். பெரியகருப்பன், கழக செய்தி தொடர்பு குழு துணைத் தலைவர் மருது அழகுராஜ், கழக மாணவரணி மாநில துணைச் செயலாளர் ராமகிருஷ்ணன் ஆகியோர் உடனிருந்தனர்.

### மரக்காணத்தில்

## ரூ.94.68 லட்சம் மதிப்பீட்டில் சாலை பழுது பார்த்தல் பணி!

### செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ., துவக்கி வைத்தார்!

*மரக்காணம், நவ. 11-*

விழுப்புரம் மாவட்டம் நெடுஞ்சாலைத்துறை சார்பில்திண்டிவனம் மரக்காணம் சாலையில் தனிச்சீர் பழுதுபார்த்தல் பணிக்கு அடிக்கல் நாட்டு விழா மரக்காணம் திரௌபதி அம்மன் கோவில் அருகில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன் தலைமை தாங்கினார். துணை சேர்மன் பழனி முன்னிலை வகித்தார். பேரூராட்சி மன்ற தலைவர் வேதநாயகி ஆளா வந்தார் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு 94 லட்சத்தி 68 ஆயிரம்ரூபாய் மதிப்பீட்டில் திண்டிவனம் மரக்காணம் சாலையில் தனிச்சீர் பழுதுபார்த்தல் பணிக்கு அடிக்கல் நாட்டி பணியை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், மரக்காணம் மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன், நெடுஞ்சாலைத் துறை உதவி கோட்ட பொறியாளர் கவிதா, உதவி பொறியாளர்கள் தின தயாளன், கோகுல கிருஷ்ணன், பேரூராட்சி செயல் அலுவலர் ஜேம்ஸ் டி.சாமி, ஒன்றிய கவுன்சிலர்கள் நாகஜோதி கணேஷ், விஜயா பெருமாள், பேரூராட்சி மன்ற கவுன்சிலர்கள் பிரபாகரன், கணபதி, தேசப்பன், வேலு, பாரத், அமானுல்லா, ஒன்றிய நிர்வாகிகள் ரவிச்சந்திரன், பாபு .சுமதி பார்த்தசாரதி, சுரேஷ்குமார், தேவதாஸ், மாவட்ட அணி அமைப்பாளர்கள் திருமலை, தங்கராஜ், ரகு, அன்பரசு, பேரூராட்சி நிர்வாகிகள் இளவரசன், செல்வராஜ், முகமது அலி, அர்ஜுனன், அன்பழகன், ஆதி, சரோஜா சரவணன், உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (12.11.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர் வைகோ அவர்கள், 2026–ஆம் ஆண்டு நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழக கூட்டணி வெற்றி பெறுவதற்காக வருகின்ற ஜனவரி இரண்டாம் நாள் அன்று திருச்சியிலிருந்து மதுரை வரை தனது தலைமையில் சமத்துவ நடைப்பயணம் மேற்கொள்ளவுள்ளதையொட்டி சந்தித்து பேசினார். அப்போது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வைகோ அவர்களுக்கு தனது வாழ்த்துகளை தெரிவித்தார்.

### கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் சிவகங்கை மாவட்ட

## அ.தி.மு.க. - அ.ம.மு.க.வினர் 600 பேர் கழகத்தில் இணைந்தனர்!

சென்னை, நவ.13-

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி மற்றும் மதுரையைச் சேர்ந்த அ.தி.மு.க. அ.ம.மு.கவினர் 600க்கும் மேற்பட்டோர் கழகத் தலைவர் முதல்வர் - மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர்.

திருப்பத்தூர் தெற்கு ஒன்றிய செயலாளர் சிவசுப்பிரமணியன் தலைமையில் மாநில அம்மா பேரவை இணைச்செயலாளர் ஈரோடு சாமி திருப்பத்தூர் மேற்கு ஒன்றிய செயலாளர் கணேசன், திருப்பத்தூர் பேரூர் கழகம் முருகேசன், எஸ். புதூர் பாரி வள்ளல், மேற்கு ஒன்றிய செயலாளர் சித்திரைச் செல்வன், வழக்கறிஞர் கணேசன் தேவகோட்டை அ.ம.மு.க.எக்ஸ் ஒன்றிய கவுன்சிலர் சரவணன், மாவட்ட இளைஞரணி இணைச் செயலாளர் பிரபு, மதுரை ரஞ்சித்குமார், ஸ்ரீவில்லிபுத்தூர் மணிகண்டன், செந்தில்குமார், விஜயகுமார், சிவகாசி சங்கர், ஸ்ரீவில்லிபுத்தூர் நல்லமணி சித்தர் மேலூர் உட்பட 500 அ.தி.மு.க.வினர் 100 அ.ம.மு.க.வினர் கழகத்தில் இணைந்தனர். உடன் சிவகங்கை மாவட்டக் கழக செயலாளர் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் மருது அழகுராஜ், செவ்வூர் முத்துக்குமார் தாணிப்பட்டி தேவன் ஆகியோர் உடன் இருந்தனர்.

## தமிழ்நாட்டில் இன்று 4 மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு!

*சென்னை, நவ.13-*

தமிழகத்தில் திருநெல்வேலி உள்ளிட்ட 4 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

தெற்கு கேரள கடலோரப் பகுதிகளுக்கு அப்பால் உள்ள தென்கிழக்கு அரபிக் கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக தென் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், 13 முதல் 15ம் தேதி வரை ஓரிரு இடங்களிலும், 16, 17 தேதிகளில் ஒருசில இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



தூத்துக்குடி மாவட்டம் எட்டையபுரத்தில் நடைபெற்று வரும் பாரதியார் பிறந்த வீட்டை பழமை மாறாமல் புதுப்பிக்கும் பணியினை தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதாஜீவன், விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் சட்டமன்ற ஜீ.வி.மார்க்கண்டேயன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். நிகழ்வில் தூத்துக்குடி மாநகர மேயர் ஜெகன் பெரியசாமி, ஒன்றிய செயலாளர்கள் நவநீதக்கண்ணன், இம்மானுவேல், எட்டையபுரம் பேரூர் கழகச் செயலாளர் பாரதிகணேசன், எட்டயபுரம் பேரூராட்சி மன்ற தலைவர் ராமலட்சுமி, சங்கரநாராயணன், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் ஆகாஷ்பாண்டியன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.